உ
சிவமயம்



ஓய்வுபெற்ற ஆசிரியர்

# அமரர் நல்லதம்பி சுப்பிரமணியம்

அவர்களின் சிவபதப்பேறுகுறித்த

# சுகந்தமலர்

30-03-2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமர்ப்பணம்

சுப்பிரமணியம் என்ற
சுகந்த நல் நாமம் கொண்டு
மேதினியில் வந்துதித்து
மேன்மக்கள் எனப் பலராலும்
பாராட்டுப் பெற்ற
பிதாமகருக்கு அணிகலனாக விளங்கி
பொன்னொளி வீசிய
பெருமையெல்லாம்
தன்னகத்தே கொண்டு
புதல்வர்களையும், புதல்விகளையும்
கண்போல் காத்து கல்வி ஊட்டி
காவியத்தலைவனாய் மிளிர்ந்த
எம் குல தெய்வத்தின்
பாதார கமலங்களில்
இம் மலரைக்
காணிக்கையாக்குகின்றோம்

இப்படிக்கு
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பீட்டப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
1919.02.28

மறைவு
2003.03.15

# அமரர் நல்லதம்பி சுப்பிரமணியம்

அவர்களின்

**திதி நிருணய வெண்பா**

சித்திர பானுதனிற் சேர்பங் குனிஒன்றில்
சுக்கில பட்சத் துவாதசிநாள் மெத்தும்
குருசுப் பிரமணியம் மேதினியை நீத்து
அருநட்டன் தாளடைந்தான் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தேவாரம்

சிறையாரு மடைக்கிளியே யிங்கோவாதேனோடு பால்
முறையாகவே உணத்தருவன் மொய்பவளத்தொடுதரணர்
துறையாரும் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொறுகாற் பேசாயே

# திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும்அயன் மாற்கரியோய் நீ
வேண்டியென்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

# திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோகிய சுந்தரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியதில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

# பெரியபுராணம்

இறவாதஇன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவா நீஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

# திருப்புகழ்

பாதிமதிநதி போதுமணிசடை நாதரருளிய குமரேசா
பாகுகனிமொழி மாதுகுறமகள் பாதம்வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுற அருள்மாளனரிதிரு மருகோனே
காலனெனை அணுகாமலுனதிரு காலில்வழிபட அருள்வாய்
ஆதிஅயனொடு தேவர் சுரருவகாளும் வகையுறு சிறைமீளா
ஆடமயிலினிலேறி அமரர்கள் சூழவலம்வரும் இளையோனே
சூதமிகவளர் சோலைமருவுசு வாமிமலைதனில் உறைவோனே
சூரனுடலற வாரிசுவரிட வேலைவிடவல பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதம்பி சுப்பிரமணியம் அவர்கள்
# தடம்பதித்த வாழ்க்கைப்பதிவுகள்

தந்தை – ஐயம்பிள்ளை நல்லதம்பி

தாய் – சின்னப்பிள்ளை

பிறப்பு – 28.02.1919 – நல்லதம்பி சின்னப்பிள்ளை தம்பதி அவர்களின் ஐந்தாவது பிள்ளையாக அவதரித்தார்.

1925 – சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியில் ஆரம்பக்கல்வி

1944 – கந்தர் தங்கம்மா தம்பதிகளின் புதல்வியான புஸ்பவதியம்மா அவர்களை தன்னுடன் இல்லற வாழ்வில் இணைத்துக் கொண்டார்

1950 – மூத்த பெண்குழந்தை செல்வமணி ஜனனம்

1953 – இரண்டாவது பெண்குழந்தை பத்மவதனி பிறப்பு

1955 – மூன்றாவது பெண்குழந்தை பேரின்பவதனி மலர்வு

1957 – மூத்த ஆண்குழந்தை உமைபாகன் ஜனனம்

1959 – இரண்டாவது ஆண்குழந்தை தேவிபாகன் பிறப்பு

1961 – மூன்றாவது ஆண்குழந்தை கலாபாகன் மலர்வு

1963 – நான்காவது புதல்வன் அம்பிகைபாகன் ஜனனம்

1965 – இளையமகன் சக்திபாகன் பிறப்பு

1969 – இளைய புதல்வியும் கடைக்குட்டியுமான மதிவதனி மலர்வு

1969 – கனிஸ்ட புத்திரி செல்வமணிக்கு விக்கினேஸ்வரநாதன் அவர்களை மணமியற்றி வைத்தார்

1970 – முதலாவது பேர்த்தி குமுதினியைக் கண்டு பூரிப்பு

1980 – இளையபுத்திரி பத்மவதனிக்கு நவரத்தினராஜாவை மணவினைப்படுத்தினார்

1981 – மூத்தமகன் [redacted]பாகனுக்கு சர்வகுலேஸ்வரியம்மாவை துணைவியாக்கி இன்பநிலையை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984 – மூன்றாவது மகளான பேரின்பவதனிக்கு உத்தியுத்ததேவனார் அவர்களை விவாகமியற்றி வைத்தார்.

1987 – இரண்டாவது மகனான தேவிபாகனுக்கு புனிதவதியை மணம்முடித்து வைத்தார்.

1989 – மூன்றாவது மகனான கலாபாகனுக்கு சந்திரகுலநாயகியை சங்கமப்படுத்தி வைத்தார்.

1992 – நான்காவது புதல்வனான அம்பிகைபாகனுக்கு நவநேசத்தை மணம்முடித்து வைத்தார்.

1995 – தனது செல்வப்புத்திரன் சக்திபாகனுக்கு மோகனராணியை தெய்வீகபந்தப்படுத்தினார்.

1995 – தனது பாச மகளான பத்மவதனி அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு தாங்கொணாத் துயர் அடைந்தார்.

1995 – தனது மனைவியான புஸ்வதியம்மா அவர்களின் இறப்பைக் கண்டு மனம் வருந்தினார்.

1996 – தனது முதலாவது பீட்டப்பிள்ளையான ஞானேஸ்வரன் சசிகலா தம்பதிகளின் அருமைப்புத்திரன் ஐங்கரனைக் கண்டு அகமகிழ்வு கொண்டார்.

2002 – தசாப்த காலமாகப் பிரிந்திருந்த இளைய புதல்வனான சக்திபாகனையும் பேரப்பிள்ளைகளையும் கண்டு களிப்படைந்தார்

2003 – கடிதே காலனவன் கவர்ந்து சென்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் புலம்பல்

தேன்மதுரத்தமிழதுவும் தெவிட்டாத இசையமுதும்
தேர்ந்த நல்வளமும் கொண்ட
தினந்தோறும் திருவிழாக் காணும் வட்டூர்
திங்களின் அறிமுகம் கொண்டே
பொன்கொழிக்கும் வளநாட்டில்
கான்மலர்க்கூட்டம் வாசம் பரப்பி
கல்விக்கோர் வழிகாட்டியாய்
கருத்துக்கோர் குறி காட்டியாய் இருந்தீர்கள்
வயிலிற்குப் போகையிலும்
வாய்ப்பாட்டைச் சொல்லித் தந்து
ஏணிப்படியில் ஏற்றிவிட்டீர்கள்
ஏலாதி இலக்கியம் முதலான
பலவகை இலக்கியங்களும்
பாரினில் சிறந்து விளங்கிடும்
புராண காவியங்களையும்
பூண்டும் மார்க்கங்களையும் சொல்லித்தந்தீர்கள்
பெற்றோருக்கோர் எடுத்துக்காட்டாய்
பேணியே எமை வளர்த்தீர்.
பொழில்சூழ் உலகமதை
போற்றிடும் விற்பன்னராய்
பெருமையதுவும் சேர்த்தீர்கள்
பக்தியும் கொண்டிணைந்து
யுக்தி பல வகுத்து உடல் உளத்தை
விருத்தி செய்தே மகிழ்ந்தீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளான நாளாம் திருநாளினில்
நன்மணம் பரப்பிடும் பெருமாட்டியாம்
புஸ்பவதியை மணம் கொண்டு
இல்வாழ்க்கை தன்னை இனிதே நடத்தினீர்கள்
முத்துக்கு மணிசேர்க்க ஓர் உறவதனை
முல்லாக்கு ஆக்கியே அல்லிருளில் கவிதை வடித்து
செல்வச் செழிப்பு மிக்க செல்வமணியை
இனிதாய்க் கண்டு மகிழ்ந்தீர்
செல்வமதுவும் சேர்ந்திருக்க
சீருடன் வாழ்ந்து வந்தீர்.
நவராத்திரி நாயகியாம் நானிலம் போற்றும் தாயை
நினைவில் நித்தம் இருத்தி ஒன்பது பிள்ளை யதனும்
ஒருங்கிணைந்து பெற்றீர்கள்
பணத்தினைத் தேட வேண்டும் என்று
புதல்வர்களை வெளிநாடனுப்பி உயர்ந்திட வழி வகுத்தீர்கள்
உணர்ந்தே நாங்கள் அழைக்கையிலும்
வாய்க்கால் வரப்புகளை விட்டே
வாண்மையுடன் பராமரிக்கவெனவே
பிறந்த ஊரே சொர்க்கமெனச் சொல்லியே
பிரளயத்தினில் வாழ்ந்து காட்டினீர்கள்

பிள்ளைகள் சார்பில்
சு **தேவிபாகன்** (லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளாத்துயில் கொண்டது ஏனோ

சிவனின் பெயரை எமக்கு இட்டு
சிறப்பாக்கிய என் அப்பாவே
சிந்தை குளிரச் செய்தே
ஐயாயெனவே எனை அழைத்தீர்கள்
ஒரு நாளேனும் சுடு சொல்லைச் சொல்லாது
ஒழுக்கத்தினைச் சொல்லித் தந்தீர்கள்
அன்பான வார்த்தைகளைச் சொல்லி
ஆடிவரும் வெள்ளலை போல் எனை ஆக்கி
காலத்தால் அழியாத கல்வியை
கனிவாய் கற்பித்தீர்கள்
பள்ளிக்குச் சென்ற பின்பும்
படித்த பாடமதனை
கண்கொண்டு வாங்கிப்பார்த்து
சந்தேகமதனையே சற்றே விலக்கிடுவீர்கள்
பாட்டும் கதையும்
பாங்காய்ச் சொல்லித்தந்தீர்கள்
வேற்றுநாடு சென்று வருகையிலும்
அன்பால் அரவணைத்தே
என்னைச் சந்தோசப் படுத்தினீர்கள்
இன்றோ மீளாத்துயில் கொண்டே
எமைக்கலங்கிட வைத்தீர்கள்

சு.சக்திபாகன் BSc Eng



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நினைவில்

பூவெடுத்து நார்தொடுத்து
ஆலயத்தில் புஸ்பாஞ்சலி
செய்யும் புண்ணியவானாய்ப் புவனத்தில் திகழ்ந்தீர்கள்
உங்கள் கிண்டலான பேச்சை இனி எப்போது கேட்போம்
உங்கள் குலக் கோயிலைக் கட்டிட வேண்டுமென்றே
அவாக்கொண்டீரே
அவ்வேலை தொடங்குமுன்னே காலன் அழைத்துவிட்டான்
சிறுவயதுப்பிள்ளைகளிற்கு அடிப்படைக் கல்வி தன்னை
ஊட்டுவதில் வல்லவராய்த் திகழ்ந்தீர்கள்.
உங்களிடம் கல்வி கற்றவர்களை
மேன்மை நிலையை அடைய வைத்து
புதல்வர்களை புத்தமுதாகப் படிக்க வைத்து
இலத்திரனியல்ப் பொறியியலாளனாக்கி
தகவல்த்தொழில் நுட்பத்துறையில் நிபுணனாய்
பட்டத்தினைப் பெற வைத்தீர்கள்
பாரினில் புகழைப் பெற வழிவகுத்தீர்கள்
சின்ன மனதிற்கு பல கதைகள் தன்னைச்
சொல்லி மகிழ்ந்தீர்கள்.
நீங்கள் கற்பித்த பங்குக் கணக்கு இன்னும் எங்கள்
நினைவில் நித்தமாய் இருக்குதய்யா
நீடூழி வாழவேண்டுமென நித்தமும் மனைவிக்கு
நித்திரைக்குப் போகையிலும் புராண படனம் படித்து
நன்மனையாளுடன் பாசமாய் இருந்தீர்கள்
வயல்கள் பல வேண்டியே பயிர்கள் பல செய்தீர்கள்
பிள்ளைகளுடனும் உங்கள் பேரப்பிள்ளைகளுடனும்
வண்டிலிலே பவனிவந்து சவாரி செய்தீர்கள்
வண்டில் அப்பப்பா என நாங்கள் அழைத்த நினைவுகள்
என்றும் எம் நெஞ்சத்தினுள்ளே துடித்துக் கொண்டிருக்கின்றன

**- பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை மேற்கு களவியோடை

அருள்மிகு பிங்கள மோதக மாமர விநாயகர்

# திருவூஞ்சல்

## காப்பு

சீர் பயிலும் வளவட்டூர் மேல் பால் மேவுஞ்
    சிவம் பயிலும் பழம் பதியாங் களவி யோடை
ஏர் பயிலும் தேமாவின் குளிர் நிழற்கீழ்
    எழுந்தருளி அதிசயங்கள் இயற்றி நிற்பீர்
நீர் பயிலும் விழியினராய் அடியர் நின்றோம்
    நேய மொடே ஊஞ்சலிசை பாடி யேத்தக்
கார் பயிலும் களிற்றுமுகக் கடவுள் நின்றன்
    கமலபதம் என்னென்றும் காப்பதாமே.

## நூல்

கங்கையணி பரசிவனார் அருளுந் தேவே
    கணபதியே எங்கோவே கருனை வள்ளால்
துங்கமலி வைராக்கியத் தூணெளுப்பி
    தொழும் பென்ற விட்டமதைத் தூக்கிவைத்தே
பொங்கியெழும் அன்பாய் தொடரை வீக்கி
    பொருந்திய நன் னெஞ்சென்னும் பலகை பண்ணி
இங்கிதமாய்த் திருவூஞ்சல் இயற்றி வைத்தோம்
    இபமுகரே விநாயகரே ஆட ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகனாம் எம்முன்னோன் ஐயம்பிள்ளை
நலிவுற்று வினைப்பயனால் நடுங்கி மாழ்கி
ஆயவழி அறியலராய்த் தொழுது நிற்ப
ஆங்குற்றுன் குடிவாழும் அழுங்கல் வேண்டா
நோயகலும் எனவருளிக் களவி யோடை
நோக்கி வந்து மாநீழல் அமர்ந்து வைகிச்
சேயரெமைக் காப்பவரே ஆட ரூஞ்சல்
தேசுமலி பிங்களரே ஆட ரூஞ்சல்

தேசுமிகு மெய்யடியார் திரண்டு நின்றார்
திருக் கோலக் காட்சி கண்டு சேவித் தற்காய்ப்
பாசமுடன் சாமரங்கள் இரட்டுகின்றார்
பரிசனர்கள் ஆலவட்டம் கவிகை கொண்டார்
ஆசகன்ற வலம்புரியின் முழக்கி னோடே
அந்தணர்தம் மறைமுழக்கம் எங்கும் ஆர்க்கும்
வீசுபுகழ் வட்டூரில் களவி யோடை
மேவியுறை பிங்களரே ஆட ரூஞ்சல்

மேவியெழு முப்புரத்தோர் திறலை மாற்ற
வேண்டு புவித் தேரசையா வகையே செய்தீர்
ஏவர்களும் தவறெண்ணி அருச்சித் தேத்த
இசைவுடனே தடையகற்றி இயங்க வைத்தீர்
காவிமலர்த்தடம் பயிலும் களவி யோடைக்
கற்பகரே அற்புதமாங் கனிகள் தந்தீர்
ஆவியினில் ஒளிப்பவரே வாரணத்தீர்
ஆகூரும் பிங்களரே ஆட ரூஞ்சல்

ஆகூருங் கணாதிபரே முக்கண் மூர்த்தி
அனைத்துலகும் ஆய்நின்ற ஞானக்கன்றே
வாகூரும் புயவசுரன் வலி செற்றேனே
வளர்குடிலைப் பொருளாகி மன்னும் எந்தாய்
பாகூரும் பண்ணியெங்கள் படைத்து வைத்தோம்
பழவடியார் நறும்பு கையும் இட்டு வைத்தே
நாகூரும் பூகமலி களவி யோடை
நாயகரே பிங்களரே ஆட ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ணினர் தம் புகலிடை நீ வக்ர துண்டா
நால்வேதத் துட் பொருணீ விக்னராசா
எண்ணினரை காப்பவன் நீ ஏகதந்தா
இறையி னொடு உரையாரை உலகம் என்றாய்
விண்ணவருக் கருள்பவன் நீ ஆதி நாதா
வெய்யோனாம் சிந்துரற்கும் அரிய செய்தாய்
தண்ணியர் வாழ் வட்டுரீற் களவீ யோடைத்
தயாநிதியே பிங்களரே ஆடீ ரூஞ்சல்

தயாநிதியே கோடிகதிர் இருந்தே ஓட
தருபீரவை வீசுமுடித் தாமம் ஆடப்
புயாசலங்கள் பொருந்து மணிக் கடகம் ஆட
புரிமுந் நூல் முத்தாரம் ஆட ஆட
உயாவகற்றுந் திருவடியில் தண்டை ஆட
உன்னடியார் மனவரங்கில் உவகை யாட
அயாவின்றி அகிலமெல்லாம் இனிதே வாழ
அற்புதரே பிங்களரே ஆடீ ரூஞ்சல்

அற்புதநின் மலரடிக்காட் செய்யும் அன்பர்
அருத்திகொடு மஞ்சன நீர் சந்தம் மாலை
பொற்புமிகு தீபமொடு தூபம் பின்னும்
புகலவரு பண்ணியங்கள் பலவும் தந்து
தற்பமகன் துயர் பூசைப் பயனே காணத்
தந்திமுகா வந்திங்குக் காந்திருந்தார்.
ஏற்புடம்பைக் குழைந்துருகச் செய்யும் எந்தாய்
ஏரம்பா பிங்களரே ஆடீ ரூஞ்சல்

குழைந்துருகி வழிபட்ட முருகுப்பிள்ளை
குறைகேட்டிங் கருள் புரிந்த ஏகதந்தா
விழைந்துருகிக் கைத்தலத்தைக் கவித்த மாக்கி
வீநயமொடு மத்தகத்தின் மோதிநின்ற
தொழுந்தகையர் குறைமுற்றும் முடித்து நிற்பாய்
தொல்லுலகை அளந்திடுமால் சாபம் தீர்த்தாய்
எழுந்துவளர் வேதமெனும் சூத நீழல்
இருந்தருளும் பிங்களரே ஆடீ ரூஞ்சல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமுதற் பாடலெமு முழக்கி னோடும்
வினைகளைவாய் கணபதியே என்றே ஏத்தி
பாதமிசை வீழ்ந்தளுவார் துழனி ஓர்பால்
பலதிசையும் தண்ணுமையே துடியே தாளம்
காதலுடன் இசைத்திடுவார் சும்மை ஓர் பால்
சுகனமிசை வானவர்கள் ஆர்க்கும் ஓர்பால்
நாதவடி வானவரே களவீ யோடை
நண்ணியருள் பிங்களரே ஆடீ ரூஞ்சல்

## வாழ்த்து

நண்ணு மறை ஆகமங்கள் நாலும் வாழி
நாடுசைவத் துறை வாழி மறையோர் வாழி
எண்ணு திருமுறையுடன்ன பூதி வாழி
ஏற்றமுறு கண்டகை சாதனங்கள் வாழி
கண்ணகன்ற உலகுடனே உயிர்கள் வாழி
கார்முகிலின் குலம் வாழி வாழி வாழி
தண்ணளிசேர் தமிழ் வாழி களவீ யோடைத்
தலம் நீடும் அருள் பொழிந்து வாழி வாழி

## எச்சரிக்கை

சிவனாரொடும் உமையார் தரும் தேவே எச்சரிக்கை
திகழும்மழ களிறாய்வரும் சிவமே எச்சரிக்கை
அவமாயையில் உழலாவகை அருள்புரிவாய் எச்சரிக்கை
ஆதியொடும் அந்தம் இலா ஐயா எச்சரிக்கை
பவமார் தரு வினையார் சுடநொந்தேம் எச்சரிக்கை
பாடும்பணி உடையார்க்கருள் பரமே எச்சரிக்கை
தவமார்தரு வட்டூர்வரு தாயே எச்சரிக்கை
தனிஆகுவில் இவர்ந்தேவரு தாதாய் எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

அன்னை தந்தை தெய்வமென அறைந்தாய பராக்கு
அருமறையின் உட்பொருளே அமலா பராக்கு
மன்னுலகு வரதனுக்கு மூத்தாய் பராக்கு
மாயவற்கு மருகோனாய் வந்தாய் பராக்கு
பண்ணுகொடை முகிலாகிப் பொழிவாய் பராக்கு
பார்ப்பதியார் அணைத்து மகிழ் பாலா பராக்கு
துன்னிய சீர்க் களவி யோடைத் தோன்றல் பராக்கு
தொழுதெழுவே சித்தியெலாந் தருவாய் பராக்கு

## லாலி

பிரணவத்தின் வடிவினரே லாலி லாலி – லாலி
பிங்கள விநாயகரே லாலி லாலி
அரவணைத்தீர் வல்லபையை லாலி லாலி – லாலி
ஐந்து கரங் கொண்டருள்வீர் லாலி லாலி
கரவறியார் அகத்துறைவீர் லாலி லாலி – லாலி
கண்மூன்று கொண்டவரே லாலி லாலி
விரவு புகழ் வட்டூரீர் லாலி லாலி – லாலி
வேண்டிநின்றேம் விநாயகரே லாலி லாலி

## மங்களம்

தும்பி முகம்கொண்டருளும் தோன்றலுக்கு மங்களம்
தோகையெங்கள் வல்லபைத் தாயாருக்கு மங்களம்
எம்பெருமான் கங்கையணி வேணியார்க்கு மங்களம்
ஏந்திழைபார் இமயவல்லித் தாயாருக்கு மங்களம்
உம்பர் நாடு காத்த குமரேசருக்கு மங்களம்
ஒண்டொடியார் வள்ளி தெய்வ யானையர்க்கு மங்களம்
பம்பு புகழ் பைரவ சாமிக்கு மங்களம்
பாடுமடி யார்கயொடு பதியினுக்கும் மங்களம்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

உலகின் முதற் பெண் மருத்துவர் – எலிசபத்பிளெக்பெல்
உலகின் முதற் பெண வழக்கறிஞர் –
அரபெல்லாமேன்ஸ்/பீல்ட்
உலகின் முதற் பெண் நீதிபதி – எஸ்கர்மோரிஸ்
உலகின் முதற் பெண் விமானி – மைலிஎலிசி
உலகின் முதல்விண்வெளிவீராங்கனை
– வலன்டினாடெரஸ்கோவா
உலகின் முதல் பெண்பொலிஸ் –
அலிஸ்ஸ்ரெப்பின்ஸ்வெல்ஸ்
முதலாவது பெண்பிரதமர் – சிறிமாவோ பண்டாரநாயக்கா
முதல் பெண் ஜனாதிபதி – மரியா ஸ்ரெலாபெரோன்

## உத்தியோக பூர்வ செய்தி நிறுவனங்கள்

| நாடு | செய்தி நிறுவனம் |
|---|---|
| பிரான்ஸ் | AFP |
| பாகிஸ்தான் | APP |
| இத்தாலி | ANSA |
| ஈராக் | INA |
| பிலிப்பைன்ஸ | PNA |
| மொரோக்கோ | MAP |
| பிரேசில | AN |
| கானா | GNA |
| இந்தியா | PTI, UNI |
| சைரே | AZP |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரத்துவம் அடைந்த

## நல்லதம்பி சுப்பிரமணியம்

## நினைவாகச்

## சீரிய போதனைகள் சில............................

1. கடவுளை அடையத் தீவிர ஏக்கம்கொள்
2. தேவைகளை மிகவும் சுருக்கிக்கொள்.
3. உன்னிடம் இருப்பதை மற்றவர்க்கும் பகிர்ந்துகொடு.
4. இன்சொல் பேசு, பிறர்மேல் தீவிர இரக்கம்கொள்.
5. நாளை செய்வதை இன்றேசெய்.
6. தற்புகழ்ச்சியையும் வீண் ஆடம்பரத்தையும் விட்டுவிடு
7. எளிமையையும் பணிவையும் ஏற்றுக்கொள்.
8. எப்பொழுதும் முகமலர்ச்சியுடன் இரு.
9. கவலைகளை அறவே ஒழி.

10 உனக்குத் தொடர்பில்லாத விடயங்களில் அக்கறை கொள்ளாதே.

11. விவேகம், வைராக்கியம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த உதவும்.
12. பேசுமுன் இரு முறை ஆலோசி.
13. செயலாற்றுமுன் மும்முறை ஆலோசி.
14. தொடர் துன்பம் வரினும் இடர்நீக்கித் துணிவுகொள்.
15. துணிகரமாகவும் ஆறுதலாகவும் எச்செயலையும் செய்.
16. நேர்மையை என்றும் கடைப்பிடி.
17. பிறர்குறை கூறுதலைப் பொருட்படுத்தாதே.
18. முகஸ்துதிக்கு வசமாகாதே.
19. எப்பொழுதும் சுறுசுறுப்பாக இரு
20. உனது குற்றங்களை மறைக்காமல் ஒப்புக்கொள்.
21. கொடைகொடு, குளிரும் இதயம்.
22. எதிர்பார்த்த அளவுக்கு அதிகமாக இருத்தல் கொடு.
23. பற்றினைக் குறை பாவங்களைத் தேடாதே.
24. எண்ணங்களைக் கட்டுப்படுத்தி பரிசுத்தமாக இரு.
25. ‘அவனருளே’ அவன்தாள் வணங்கு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்


எங்கள் குலவிளக்கு
**சுப்பிரமணியம் அவர்கள்**
மரணித்த வேளை எங்களோடு
துயரங்களில் பங்கு கொண்டவர்களுக்கும்
இறுதிக்கிரியைகளில் கலந்து
கொண்டவர்களுக்கும்
தூரதேச உறவுகளுக்கு மரணச்செய்திகளை
விரைவாக அனுப்பியவர்களுக்கும்
அந்தியட்டி கிரியைகளில் எம்மோடு
இணைந்தவர்களுக்கும் நெஞ்சம்
நிறைந்த நன்றியைத்
தெரிவித்து கொள்கின்றோம்

இங்ஙனம்
**பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிவ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ..வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய். அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

Mayans Vaddukkoddai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org